DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 154 /2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | மாரி (P.w.1) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of August 2025
(<u>எதிரிகள் ஆஜர்</u> )

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது புலியாண்டார்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2023 ம்வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. எனது மகன் கருப்புராஜா (வயது 20) எங்கள் ஊர் நாடக மேடை அருகில் விளையாடி கொண்டிருந்தார். நான் அவரை பார்த்து ஏன் வேலை செய்யவில்லை என்று திட்டினேன். அதில் அருகிலிருந்த பிரியா நீ என்னை தான் பேசுகிறாய் தேவிடியா மகளே என்று திட்டினார். எதிரி சுமதி என்னை தேவிடியா என்று திட்டினார். அருகிலிருந்த பானுபிரியா என்பவர் என்னை விலக்கிவிட வந்தார். எதிரிகள் முருகனும், பழனியும் தேவிடியா என்று கூறிகொண்டு, எதிரி முருகன் கட்டையை கொண்டு எனது தலையில் அடித்தார். எதிரி பழனி கட்டையாலும், கையாலும் எனது கையில் அடித்தார்.

அதில் எனக்கு கையில் லேசாக விலகிகொண்டது. அதன்பிறகு எனது கணவர் சம்பவ இடம் வந்து விலக்கிவிட்டார். ஊர்மக்களும் வந்து விலக்கிவிட்டார்கள். அதன் பிறகு வீரசோழன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்தான் அது. **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அதன்பிறகு காவல்நிலையத்திலிருந்து மருத்துவனைக்கு போக சொன்னார்கள். நான் வீரசோழன் அரசு மருத்துவமனை சென்று, அங்கிருந்து திருச்சுழி அரசு மருத்துவமனை வந்தேன். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மறுநாள் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சையிலிருந்து 3 நாட்கள் கழித்து வந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.குவி**

2. பட்டியல் சாட்சி 2 வேலு எனது கணவர் என்றால் சரியதான். ப.சா.3 பானுபிரியா எனது தங்கையா என்றால் மகள். ப.சா.4 ராக்கு எனக்கு நாத்தனார். ப.சா.5 பிரபு எனது கொழுந்தன். ப.சா.6 தனிகொடி எனக்கு மாமாமுறை. ப.சா.7 மகாளி எனக்கு கொழுந்தன். சண்டை நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் கணேசன் என்பவர் வீடும், கருப்பையா என்பவர் வீடும் உள்ளது என்றால் சரிதான். சண்டை நடந்த நேரத்தில் கருப்பையாவும், கணேசனும் இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. எனக்கும், எதிரிகளுக்கும் வாக்குவாதம் நடக்கும்போது 40, 50 பேர் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். எனக்கும், எதிரிகளுக்கும் வாக்குவாதம் சுமார் 1/2 மணிநேரம் நடந்திருக்கும் என்றால் சரிதான்.

3. 40, 50 பேர் இருந்ததால் தள்ளுமுள்ளு ஏற்பட்டபோது யார் யார் யாரை அடித்தார்கள் என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. பிரச்சனை ஏற்பட்ட பிறகு இரவு 7, 8 மணியளவில் வீரசோழன் காவல்நிலையம் சென்றேன். வீரசோழன் காவல்நிலையம் சென்றவுடன் போலீசார் எழுதி அதில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. எனக்கும்

எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்ட பின்னர் காவல்நிலையத்தில் கையொப்பம் செய்த பின்னர் வேறு எதிலும் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியதான். அதன் பின்னர் போலீசார் என்னை எங்கும் விசாரணை செய்யவில்லை, கையொப்பம் செய்யவும் இல்லை. சம்பவம் நடந்த தேதியில் என்மீதும், பானுபிரியா, ராமசாமி, வேலு, ராமலெட்சுமி, கருப்புராஜா மீதும் எதிரிகளை அடித்ததாக கூறி எதிரிகள் வீரசோழன் காவல்நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுத்து, அதில் குற்ற எண்.42/2023 இதச பிரிவுகள் 143, 294(பி), 323, 324, 341, 506(2) உ/இ தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியும்.

4. வீரசோழன் மருத்துவமனையில் யார் யார் என்னை அடித்தார்கள் என்று விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வீரசோழன் மருத்துவமனைக்கு எந்த தேதியில் சென்றேன் என்று ஞாபகம் இல்லை. நான் சொல்வதுபோல் எதிரிகள் யாரும் என்னை அடித்து காயப்படுத்தவில்லை என்றாலும், நான்தான் எதிரிகளை அடித்து காயப்படுத்தினேன் என்றாலும், இந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகளை தாக்கும்போது ஏற்பட்ட சிறு சிறு காயத்தை வைத்து கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 154 /2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | பானுப்பிரியா (P.w.2) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of August 2025

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது புலியாண்டார்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனக்கு சித்தி. கடந்த 2023ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. மாலை 6.00 மணியளவில் எங்கள் ஊர் எங்கள் வீட்டு அருகில் உள்ள பால்வாடி அருகில் அ.சா.1–ன் மகன் கருப்புராஜா உட்கார்ந்திருந்தார். அப்போது அங்கு இருந்த அ.சா.1–ஐ பார்த்து ஏன் வேலைக்கு செல்லாமல் இங்கு இருக்கிறாய் என்று கேட்டார்கள். அப்போது எதிரி பிரியா அங்கு சென்று எனது சித்தியிடம் ஏன் சண்டை போடுகிறாய் என்று கேட்டார். அதில் அவர்களுக்குள் சண்டை வந்தது. அப்போது எதிரி சுமதியும் அங்கு வந்து சண்டைபோட்டார். அதை நான்

விலக்கிவிட்டேன். அப்போது எதிரி பழனி வந்து என்னை அடித்தார். சம்பவம் நடக்கும்போது சாயந்தரம் ஆகிவிட்டது. எனது சித்திக்கு எதிரி முருகன் அடித்ததில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட அ.சா.1 திருச்சுழி சென்று, அதன்பின் அருப்புக்கோட்டை மருத்துவமனை சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.குவி**

2. சாட்சிகள் வேலு, மாரி, ராக்கு, பிரபு, தனிகொடி ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். பிரச்சனை எந்த நேரம் நடந்தது என்றால் பொழுதுமுடியும்போது நடந்தது. சரியாக நேரம் சொல்ல இயலவில்லை. எனக்கும் எதிரிகளுக்கும் வாக்குவாதம் ஏற்படும்போது சுமார் 40, 50 பேர் இருந்திருப்பார்கள் என்றால் 10 பேர் இருந்திருப்பார்கள். அந்த நேரம் இருட்டாக இருந்ததால் யார் யார் யாரை தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான். பிரச்சனை நடந்த பிறகு நான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லவில்லை என்றால் சரிதான்.

3. அதன் பின்னர் மாரி மருத்துவமனைக்கு சென்றாரா? காவல்நிலையம் சென்றாரா? என்றால் வீரசோழன் மருத்துமனைக்கு சென்றார். நடவடிக்கை எடுக்க சொல்லி வீரசோழன் காவல்நிலையத்திற்கு எப்போது சென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரச்சனை சம்மந்தமாக மறுநாள் காலையில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எதிரிகள் யாரும் என்னை அடித்து காயப்படுத்தவில்லை என்றாலும், நான்தான் எதிரிகளை அடித்து காயப்படுத்தினேன் என்றாலும், இந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகளை தாக்கும்போது ஏற்பட்ட சிறு சிறு காயத்தை வைத்து

கொண்டு எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 154 /2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | பிரபு (P.w.3) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of August 2025
(<u>எதிரிகள் ஆஜர் </u>)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது புலியாண்டார்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1–ஐ தெரியும். கடந்த 2023ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. மாலை 6.00 மணியளவில் ஊர் நடுவில் உள்ள நாடகமேடை அருகே நானும், பசங்களும் அங்கு அமர்ந்திருந்தோம். அப்போது அ.சா.1 அங்கு வந்து அங்கு விளையாடி கொண்டிருந்த அவரின் மகன் கருப்புராஜாவை பார்த்து திட்டினார்கள். அப்போது அங்கு எதிரி பிரியா வந்து அவருக்கும், அ.சா.1–க்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அங்கு இருட்டாக இருந்ததால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. அதில் அ.சா.1–க்கு தலையில் காயம் ஏற்பட்டது.

மருத்துவமனை கொண்டு சென்றார்கள். அவரை யார் அடித்தார்கள் என்று தெரியாது. போலீசார் விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி**

2. நான் சொல்வதுபோல் சொன்ன நாள் நேரத்தில் இந்த வழக்கின் காயம்பட்ட சாட்சிகளுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.